1972 மார்ச் 13]

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்த இடத்தையும் அமைச்சரவர்கள் நேரிலே வந்து பார்த்து இருக்கிறார்கள். புழலேரிக்கு வரும் அந்தக் கால்வாய் ஒரு கிராமத்திலுள்ளவர்களை அவர்களுடைய வயலிலிருந்து பிரித்து, அவர்கள் மறுபடியும் போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அமைச்சரவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது அது அதிகாரிகளின் ஆய்வில் இருக்கிறது. இந்த ஆண்டே கட்டுவதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

சாலைகள்

* 467 வினு—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள காரமடை-வெள்ளியங்காடு சாலை சீரமைப்புத் திட்டம் நிறைவேற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போதைக்கு இச்சாலையை சீரமைப்பதற்கு திட்டம் ஒன்றுமில்லை.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் இருக்கிற காரமேடை—வெள்ளியங்காடு வரையில் இருக்கும் சாலை சீரமைப்பு வேலை நிதி வசதி போதாததால் தடைப்படுகிறது. எனவே, அதற்குப் போதுமான நிதியை அரசு அளித்து வேலையைத் துரிதப்படுத்துவதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : அந்தச் சாலையின் மொத்த நீளம் 10 மைல் 3 பர்லாங்கு. அதிலே 6 மைல் 7 பர்லாங்கு அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. பஸ்-ரோடு ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சீரமைப்பதற்கு ரூ. 30,000 செலவழிக்க இருக்கிறோம். அரசாங்க நிர்வாகத்தில் இருக்கும் ரோடைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்க முடியும். மீதியுள்ள சாலையின் நீளத்திற்கு பஞ்சாயத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபற்றி பரிசீலிக்கலாம்.

* 468 வினு—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :